**பிரதமரின் ஜோர்டான், எத்தியோப்பியா மற்றும் ஓமன் பயணம் (டிசம்பர் 15 - 18, 2025)**

டிசம்பர் 11, 2025

மாண்புமிகு அரசர் அப்துல்லா II பின் அல் ஹுசைன் அவர்களின் அழைப்பை ஏற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் டிசம்பர் 15 - 16, 2025 தேதிகளில் ஜோர்டானின் ஹஷெமைட் கிங்க்டமிற்கு பயணம் மேற்கொள்வார். இந்த பயணத்தின் போது, நமது பிரதமர் அவர்கள் மாண்புமிகு அரசர் அப்துல்லா II பின் அல் ஹுசைன் அவர்களை சந்தித்து இந்தியாவிற்கும் ஜோர்டானுக்கும் இடையிலான உறவுகளின் முழு விஷயங்களையும் மதிப்பாய்வு செய்வார், மேலும் பிராந்திய பிரச்சனைகள் குறித்த முன்னோக்குகள் குறித்தும் ஆலோசிப்பார். இந்த வருகை, இரு நாடுகளுக்கும் இடையிலான அரசுமுறை உறவுகளை நிறுவிய 75வது ஆண்டு நிறைவைக் குறித்து மேலும் இந்தியா-ஜோர்டான் இருதரப்பு ஈடுபாட்டை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது, பரஸ்பர வளர்ச்சி மற்றும் செழிப்புக்கான ஒத்துழைப்பின் புதிய வழிகளை ஆராய்ந்து மற்றும் பிராந்திய அமைதி, செழிப்பு, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவிப்பதற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

2. இரண்டாம் கட்ட பயணத்தில், எத்தியோப்பிய பிரதமர் டாக்டர். அபி அகமத் அலி அவர்களின் அழைப்பின் பேரில் நமது பிரதமர் டிசம்பர் 16 - 17, 2025 தேதிகளில் எத்தியோப்பிய கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசுக்கு அரசுமுறை பயணம் மேற்கொள்வார். இது பிரதமர் மோடி

அவர்களின் முதல் எத்தியோப்பியா பயணமாக இருக்கும். இந்தியா - எத்தியோப்பியா இருதரப்பு உறவுகளின் அனைத்து அம்சங்கள் குறித்தும் பிரதமர் டாக்டர். அபி அகமத் அலி அவர்களுடன் பரந்த அளவிலான கலந்துரையாடல்களை நமது பிரதமர் நடத்துவார். தெற்கு உலக நாடுகளின் பங்குதாரர்களாக, நட்பு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பின் நெருக்கமான உறவுகளை முன்னெடுப்பதற்கான இரு நாடுகளின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்த இந்த பயணம் உதவும்.

3. அவரது பயணத்தின் இறுதி கட்டத்தில், ஓமனின் மாண்புமிகு சுல்தான் ஹைதம் பின் தாரிக் அவர்களின் அழைப்பின் பேரில், பிரதமர் அவர்கள் 17 - 18 டிசம்பர் 2025 தேதிகளில் ஓமன் நாட்டிற்கு செல்வார். இது பிரதமர் மோடி அவர்களின் ஓமனின் இரண்டாவது வருகையாக இருக்கும். இந்தியாவும் ஓமனும் நட்பு, வர்த்தக இணைப்புகள் மற்றும் வலுவான மக்கள்-நலன் உறவுகளின் நூற்றாண்டு பழமையான பிணைப்புகளை அடிப்படையாகக் கொண்டு அனைத்தையும் உள்ளடக்கிய உத்திசார் கூட்டாண்மையை பகிர்ந்து கொள்கின்றன. இந்த வருகை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அரசுமுறை உறவுகளை நிறுவிய 70 ஆண்டுகளை குறிக்கிறது, மேலும் டிசம்பர் 2023-யில் ஓமனின் மாண்புமிகு சுல்தான் அவர்களின் இந்திய பயணத்தை தொடர்ந்து இது செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, இராணுவம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட இருதரப்பு கூட்டாண்மையை விரிவாக மதிப்பாய்வு செய்ய இந்த வருகை இரு தரப்பினருக்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும்.

புது தில்லி

டிசம்பர் 11, 2025